உ

கடவுள் துணை.

# கண்டிராஜன் ஒப்பாரி.

OF THE REGISTRAR OF
JAN 1948
MADRAS

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 194, கைஸர் தெரு, பிரக்கோட்டை,

கொழும்பு.

1947

[சதம் 30.

உ

கடவுள் துணை.

# கண்டிராஜன் ஒப்பாரி.

THE REGIST
JAN 1948
MADRAS

திருவளர்பூ மாலைமார்பா-என் சிங்கமகா ராசாவே
ருவளரிங் கிலிஷரும்மைக் கட்டவுங் கனவுகண்டேன்
ாளுக் கரசரேயென்-மன்னு மதுரைக்கு ராசாவே
ாருக்கு வீரரேநீர் புறங்காட்டப் பூபதியே
ாளுஞ் செல்வமெல்லாம்-அப் பொல்லாத இங்கிலிஷார்
ராள மாகவந்து ஊராளக் கண்டேனே
ன்னிலங்கை மன்னவரே-அதி தீரமுள்ள சிங்கமேநீர்
சுற்ற பேர்களுக்குச் செல்வக் கொடையோரே
ணன்மொழி வாசகரே-இக் கண்டிக் கரசரேஉம்
ன்னரெத்ன முடிசரிந்து மண்ணில்விழக் கண்டேனே
என்ன குறையோஐயா-என் மன்னவரே யும்முடைய
பொன்னிலங்கை கண்டி பிடிபடவுங் கண்டேனே
தோராத சிங்கமேநீர்-எங்கள் சூர்யகுல வங்கிஷமே
நீர்படையில் தோற்றுவர நிச்சயமாய்க் கண்டேனே
பஞ்சணை மெத்தைகளும்-உமது பாவிணையுங் கெட்டலைந்து
அஞ்சலென்று நாங்கள் அலைந்திடவுங் கண்டேனே
ஓடமென்றுந் தோணியென்றும்-என் இராசத் துரையேயிந்த
லகிலுள்ளோர் சொல்வதற்கு ஒப்பாகுமோ அறியேன்
தடக் கிடையாத-என் செல்வச் சிரோன்மணியே
ாடதிலும் நகரதிலும் நானறியே னிக்கொடுமை
வங்கர் குலிங்கர்களும்-மற்றும் வடுகர் மராட்டருடன்
சிங்களவ ரடிபணியும் தேசத்தி லங்கைமன்னு
சுந்தரஞ்சே ராசமன்னு-நான் சொல்வதைக்கே ளும்முடைய
மந்திரவான் ... விட்டு மறையவும்நான் கண்டேனே
தில்-இம் மானிடர்கள் தீண்டாக்கால்
சீக்கிரமாய் நீர்கொடுப்பீர்
ல்-நீர் அவதிப்பட வுங்காலில்
தர் விலங்கிடவுங் கண்டேனே
ர்கள்-ஐயோ கூட்டமாய் வந்தயின்று

வெல்லும்படை மீதில்நம்மை வெட்டவுங் கண்டேனே
ஏங்கி மனங்கலங்கி-நாம் இடுக்கமுறும் வேளையிலே
ஓங்குபுக ளிங்கிலிஷர் ஓட்டிவிடக் கண்டேனே
கேளுமென்தன் ஐயாவே-இக் கீர்த்திபெற்ற கண்டிநகர்
ஆளுகின்ற பூபதியே அன்பவர்க்குச் சற்றுமில்லை
பாரரசே நீரிருந்த-நல்ல பளிங்குமா மண்டபந்தான்
நாள்தோறும் பாழ்கிடக்க நான்கனவு கண்டேனே
நேசமுடன் வேண்டித்தந்த-அந் நெரிஞ்சிப்பூச் சேலையிலே
மோசமதாய்த் தீப்பிடித்து முழுதும்பற்றக் கண்டேனே
நீர்படுக்கு மெத்தையிலே-என் விக்கிரமசிங்க ராசாவே
நாய்படுத் துறங்கவும் நான்கனவு கண்டேனே
சந்திரனுக்கு ஒப்பாக-நீர் சமைத்துவந்து கட்டின
தாலி அறுந்து தரையில்விழக் கண்டேனே
வாள்சாற்றும் மூலையெல்லாம்-என் ராசாவே நித்தியமும்
வௌவா லுறைந்திருக்க மன்னரே கண்டேனே
அன்பாக ராசாவே-எனக் கமைத்துவைத்த கோபுரந்தான்
வம்பாகவே யிடிந்து மண்ணில்விழக் கண்டேனே
வாசல் தனிலேநிற்கும்-எங்கள் மரமென்று தான்முறிந்து
நேசமுடன் தரையில்விழ நிச்சயமாய்க் கண்டேனே
இவ்விதமாய்ச் சொற்பனங்கள்-நான் கண்டேனே மன்னவரே
ஈதென்ன அழிமதிக்கோ ஏதுக்கோ யானறியேன்
எனது கனாமுழுதும்-என் னரசேநான் சொல்லிவந்தேன்
தனதெண்ண மெப்படியோ அப்படியே நீர்நடவும்

வேறு.

இவ்வார்த்தை கேட்டவுடன் ஏந்தல்விக்ரம சிங்கனவன்
செவ்வாய்ப் புலியதுபோல் சினந்துமே சொல்லுகிறான்
விக்ரமசிங்க ராசனென்று என்பெயர் சொன்னாலுமடி
உக்கிர பூதப்பசாசு பிடித்தசனி போயொளிக்கும்
பேர்பெரிய ராசர்களென் பேர்கேட்டா லஞ்சிடுவார்
வார்பரவும் பூண்முலையே வாய்மதங்கள் பேசாதே
மந்திரியைத் தானழைத்து மன்னசிங்க னேதுசொல்வான்
தந்திரமாய் நானேறுங் குதிரையொன்றை அழையுமென்றான்
அப்போது மந்திரியும் அந்தந்தப் புரவிகுணம்
தப்பா தெடுத்தவனும் சாற்றலுற்றான் ராசனுக்
அச்சப் புரவியதோ ஆலவட்டம் போலவரும்
நோக்கி நிறத்தானே கோவிந்தன் மின்னானே
ஆழும் கடலதனை அகற்றி வருபவனே
ஏழு கடலதனை எட்டித்தான் பாய்ந்தவனே

இந்திர ஞோடுநின் றிணங்கிப்போர் செய்தவனே
சந்திரனே டெதிர்த்துச் சமயப்போர் செய்தவனே
எந்தக் குதிரையைநான் இங்குகொண்டு வாறதையா
அந்தக் குதிரையைநீ ரறியவே சாற்றிடுவீர்
நல்ல கெதியாக நடந்துசெல் லும்பெரிய
வெள்ளைக் குதிரையொன்று வீசத்திலே கொண்டுவா
அந்தமொழி கேட்டவுடன் அன்பான மந்திரியும்
சிந்தையுடன் குதிரையொன்றைச் சீக்கிரத்திலே யவிழ்த்தான்
கோலவர்ண மண்டபத்தில் குதிரையைக்கொண் டந்துவிட்டுச்
சோடித்தான் குதிரைகளைத் தோகைவரிப் பட்டாலே
பொன்னுலே கல்லணைகள் பூட்டி யலங்கரித்துக்
கன்னத்திற் சங்கிலியும் கட்டி யலங்கரித்தான்
கண்டத்திற் சங்கிலியும் கலகலெனத் தானணிந்து
கொண்டுவந்தான் குதிரைதனைக் கொற்றவன்றன் முன்பாக
பார்த்தா னிலங்கைமன்னன் பண்பான குதிரைதன்னைக்
கீர்த்திபெற்ற எந்தனுக்குக் கிருபையுள்ள குதிரையென்றான்
முத்து முகமிலங்க முன்வா லிலங்கிவர
எத்திசை யோர்புகழ ஏறினன் குதிரையிலே
வன்னியமார் நடக்க மண்டலீகர் தான்நடக்கச்
சென்னிதனில் முடிதரித்த தேசமன்னர் சென்றாரே
சிறியசெங் கோலிங்கத் தேசத்தோர் தானடக்க
வறியவரும் பின்னாக மற்றோருஞ் சூழ்ந்துவர
நாகசின்ன மூத நகரி மிகமுழங்கப்
பூரிகை மத்தாளம் புடைதவில்கள் நின்றொலிக்கச்
சின்னங் கலிப்பச் சிலம்புகள் ஓலமிட
அன்னநடைப் பெண்கள் அடைப்பம் பிடித்துவர
வெஞ்சா மரைவீச வேதியர்கள் சூழ்ந்துவரக்
கண்காட்சி யைப்பார்க்க கண்டோரெல்லாம் நடக்க
குஞ்சம் விசிறிவரக் குடைபன்னீர் தான்தெளிக்க
அஞ்சலென்று எல்லோரும் அடிபணிந்து தெண்டனிட
வாழைமரம் நாட்டிடுவார் வான்கரும்பு தானிடுவார்
பாலைநிறை குடங்கள் பந்திபந்தியாய் நிறைப்பார்
இப்படியாய்த் தேசத்தோ ரிடைபிடையே சூழ்ந்துவரக்
கற்புடைய மாதரெல்லாம் கண்டு மனங்களிக்க
வந்தா னிலங்கைமன்னன் வான்புரவி மீதேறிக்
கண்டவுடன் பெண்களுக்குக் காதல் மிகவாகிக்
கால்சோர்ந்து கைசோர்ந்து கலங்கி மனதியங்கி
மேல்முழுதுங் காமவெள்ளம் மீறுதம்மா என்பார்கள்

எங்களுக்கு இந்தவிதம் என்வந்த தென்றெண்ணி
ஆலோசனை யாகுதம்மா ஐயையோ என்பார்கள்
தாய்மார் களோடிவந்து தையல் நல்லாரேயடி
மாயமைய லுனக்கு மகளே எழுந்திரென்பாள்
அந்த அதிசயத்தை கண்டு இலங்கைமன்னன்
அப்பால் நெடுந்தூரம் போனனே ராசாவும்
அதிகாரி மாரிருக்கும் அந்தத் தெருக்கடந்து
திசைமார்க ளிருக்கின்ற திசையெல்லாந் தான்கடந்தான்
அந்தத் தெருக்களையு மரசன் கடந்தபின்பு
பூசனியால் தானிருக்கும் பொற்றெருவாய்த் தான்நடந்தான்
பூவெடுக்கத் தோட்டம்போய் பூக்கொய்து கொண்டுவந்து
புறக்கதவில் வந்துநின்றாள் பூசனி மாமயிலாள்
கண்டா னிலங்கைமன்னன் கன்னி வடிவதனைக்
கண்டு மதிமயங்கிக் காதலித்து நின்றானே
நின்றவனைக் கண்டவுடன் நிமிஷத்திற் கதவடைத்துக்
கொண்டுள் ளிருந்தாளே கொற்றமங்கை சங்கைநல்லாள்
வெட்டி மறைந்ததுவோ மெல்லிடை சாய்ந்ததுவோ
சிட்டுக் குரிவியைப்போல் திசைமாறினதோ மந்திரி
பொன்னின் குடமதுவோ போய்த்தா னொளித்ததடா
எண்ணாத வெண்ணமெல்லாம் என்மனதிற் றோன்றுதடா
தச்சன் கடைந்ததுவோ தம்பிரான் சேர்த்ததுவோ
தட்டா னுருக்கியையோ தான்வார்த்து வைத்ததுவோ
தெய்வரம்பைமேனகையோ சிற்றிடைப் பொற்சிலையோ
வையகத்திலும் காணேன் மாதைப்போல் பெண்ணரசை
எவ்வூரு நாட்டாளோ எங்குள்ளாளோ வறியேன்
செவ்வையா யெந்தனுக்குச் செப்புவாய் மந்திரியே
ஆலப்பிள்ளை தான்வளர்த்த அருமை மருமகளைநீர்
அவளிவ ளென்றுசொல்ல ஆகாது ராசாவே
அவ்விதமாய்ச் சொன்னதைநீ ராலப்பிள்ளை தானறிந்தால்
கவுண்கொண்டு நம்சனதையைக் காட்டிற் பறக்கவைப்பான்
சரியல்ல ராசாவே தர்மமல்ல உங்களுக்குத்
தன்மனைநீர் சாருமென்று சாற்றினன் மந்திரியும்
நின்று இலங்கைமன்னன் நினையாதெல்லாம் நினைத்துக்
கொண்டுமதிமயங்கிக் கொற்றவனுக் கப்போது
உள்ளம் நடுங்கிவேர்வை யுடம்பெல்லாம் வெள்ளமதாய்த்
தள்ளாடித் தள்ளாடித் தன்மனைக்குப் போய்சேர்ந்தான்
எண்ணாத எண்ணமெண்ணி ஏழைமதி யாகிமன்னன்
கண்ணுறக்கந் தானுமற்றுக் கதைபேச்சும் வேறுச்சே

அன்ன மருந்தான் அடைக்காய்ப் பிளவருந்தான்
உண்ணுகின்ற சோற்றுக்கு ஒன்றுந்தான் சொல்லறியான்
படிகள் கொடுத்தறியான் பலதலைமை வைத்தறியான்
இடைகா லெறிவதல்லால் ஏதொன்று மவனறியான்
நாடு நடத்துகின்ற நன்முறைமை யொன்றறியான்
வீடு நடத்துகின்ற விதமுமே தானறியான்
மங்கைநல்லா ளோடிவந்து மடிமேல் தலையைவைத்துத்
தங்களுக்கு வந்த சதிமோசம் நானறியேன்
கண்ணூறு பட்டதுவோ காற்றுப் பிடித்ததுவோ
கூடவந்தே பேய்களும்மைக் கொல்லப் பிடித்ததுவோ
குதிரையிலே சென்றதினாற் குலங்கிற்றோ உம்முடம்பு
என்றாளே மன்னவனின் ஏந்திளையாள் மாதுநல்லாள்
அந்தமொழிக்கு மன்னன் யாதொன்றும் பேசாமற்
சும்மா கிடந்தானே சொகுசுள்ள பஞ்சனைமேல்
அந்நேர மங்கைநல்லாள் அதிக மனஞ்சலித்துத்
தாதியரே தோழியேயென் தங்கையரே கேளுமடி
இந்தமையல் மன்னனுக்கு எய்தியதை நானறியேன்
பரிகாரி மார்களை நீர் பார்த்தழைத்து வாருமடி
அந்நேரம் தாதியர்கள் அனுபரி காரியைப்போய்
அழைத்தோடி வந்தார்கள் அன்பாக மாளிகைக்குப்
பார்த்தான் பரிகாரி பண்புடைய மன்னனைத்தான்
மோகமையை லல்லாது வேறுமைய லில்லையென்றான்
இந்தமையல் தீரமருந் தென்னிடத்தி லில்லையம்மா
சொந்தமருந் தொன்று சொல்லக்கே ளென்தாயே
அரண்மனையிலே யிருக்கும் அழகுள்ள பெண்களைத்தான்
கூட்டிவந்து ஆட்டிவையும் குணமுள்ள அம்மா நீர்
அப்பொழுது மன்னனுக்கு அறிவுமிகத்தெளியும்
என்றுசொல்லிப் பரிகாரி ஏகினா ளப்பாலே
அந்நேர மங்கைநல்லா ளதிக மனஞ்சலித்து
அரண்மனைப் பெண்களிலே அழகுள்ள கன்னியரை
ஆண்மூச் சிலாதபெண்கள் ஆரணங்கு தாதியராய்
நாற்பதுபேரை ஒருமிக்கத் தான்தெறிந்து
காதுக்குத் தோடுமிட்டுக் கைக்குப்பொற் காப்புமிட்டுச்
சோடித்தாள் மங்கைநல்லாள் தோகைவரிப் பட்டாலே
இடையிற்பொன் னுடைகட்டி ஏகாந்தப் பொட்டுமிட்டு
மருவும் விரல்களுக்கு மாமலர்ப்பொன் னாழியிட்டு
கொஞ்சுகிளி வஞ்சியரைக் கோலவர்ணங் காட்டியவள்
கூட்டிவந்தாள் ராஜாமுன் கொவ்வையிதழ் மின்னாரை

வாய்க்கட்டி கைகூப்பி மங்கை நல்லா ரெல்லோருஞ்
சேலே யொதித்கியே சேரவந்து நின்றார்கள்
மன்னன் தனக்கெதிரே வந்தவர்கள் நின்றபின்பு
சற்றுகிலு மன்னன் தலைநிமிர்ப்பிப் பார்க்கவில்லை
தாதியரே தோழியடி தங்கையரே நீங்களெல்லாம்
தனத்தைதிறந் தரசனுக்குத் தானடப்பஞ் செய்யுமென்றாள்
விசனந் தெளியவில்லை வேந்தனுங்கண் பார்க்கவில்லைப்
பந்துமுலைப் பெண்களெல்லாம் பார்த்தடப்பஞ் செய்தார்கள்
கலைதெளியா மன்னவனும் கண்விழித்து ஏதுசொல்வான்
கரும்பினிய பெண்களேநான் கண்டபுதினமொன்றும்
சொல்லுகிறேன் கேளுமடி சுந்தரஞ்சேர் தோகையரே
பூசனியா ளென்றொருத்தி புறக்கதவில் வந்துநின்றாள்
போகாத நாடுகளும் போய்ப்பார்த்து வந்தேனடி
வந்துநின்ற கன்னியைப்போல் மண்டலத்திற் கண்டதில்லை
காணாத சித்திரத்தைக் கண்டெழுதி வைத்தேனப்
பூசணியாள் தன்னழகைப் புத்திகொண்டு நாள்தோறும்
எண்ணி எழுதிடினும் எழுபனை தாங்காது
உற்றமொழி சொல்லுகிறேன் ஒவியமே கேளுமடி
கூந்தலுடை யழகோ குலைபுங் கடலிருளோ
வாய்ந்தமலை யிருளோ அவ் வஞ்சிநல்லாள் கொண்டையது
மூன்றாம் பிறையதுபோல் முகஞ்சந்திர பூரணமாம்
தீண்டாத தெண்ணிலவோ அத் தேன்மொழியா ளின்முகந்தான்
இருண்ட நிலவுக்கு இருத்தை அமா வாசையுண்டு
அக்கன்னிமுகஞ் சற்றுங் கலங்கா தொருநாளும்
ஆணிமுத்தோ செந்நெல்முத்தோ அலைகடலின் சிப்பிமுத்தோ
இத்தனை முத்துக்கும் இடையில் தமருமுண்டு
அந்தமங்கை நல்லாளின் அழகான பற்களுக்கு
ஆரும் வடுச்சொல்லக் கூடாது மங்கையரே
வாய்த்த முருக்கிதழோ வண்ணச்செவ் வந்திபூவோ
மதுரங்கிளிச் செண்டதுவோ மந்தாரைப்பூவதுவோ
சிகப்பெல்லாந் தோற்றுத் தொலைதிடினும் நான்கண்ட
மங்கைநல்லாள் வாய்சிகப்பு மாறா தொருநாளும்
ஆர்க்குங் கமுகு அலமருந்தப் பூவதுதான்
கன்னிக் கமுகையவள் கழுத்துக்கு ஒப்பிடலாம்
மங்கைகழுத் தாபரண மற்றும் பணிகளையும்
உங்களுக்குச் சொல்லிவர என்னால் முடியாது
செப்பரிய தாமரையின் சிறுவல்லியோ வறியேன்
இப்பெரிய தேசத்தோ ரெடுத்தெரியும் பந்ததுவோ

பம்புசெறி கன்னிமுலை பகடக்காயோ சிமிளோ
சக்கர வாளப்புள்ளோ சாற்றவுங் கூடுதில்லை
செவ்வல் குரும்பையதோ சிறுமாதுளம் பழமோ
பார்த்தவர்க ளப்போது பதறியே வெட்டிடுவார்
சிமிளென்று சொன்னாலுந் திறப்பார்க ளிப்புவியோர்
மாதுமுலைக்கு பொரு வடுச்சொல்லக் கூடாது
ஆலந் துளிர்போல அமர்ந்திருக்குந் திருவயிறு
சோறுதனை உண்டிருந்தால் சொகுசாய்ப் பெருத்திருக்கும்
மாதுநல்லாள் பூசணியின் வயிற்றினழ குக்குவொரு
வடுச்சொல்லக் கூடாது மங்கையரே யறிந்திடுவீர்
நூலென்று சொல்லிடலாம் நொடிக்கு மிடையழகு
சற்றே நடந்தாலும் தளராது தையலிடை
மங்கைநல்லாள் பெண்மயிலின் மாதினிடை யழகை
வாயா லெடுத்தெனக்கு வகுத்துரைக்கக் கூடாது
காற்றுக்கு நின்றாலும் கறுக்குங் குருத்ததுதான்
வாழைக் குறுத்தென்று வருந்தொடைக்குச் சொல்லிடலாம்
அன்னநடைப் பூசணியின் அழகு தொடைகளுக்கு
மன்ன ரெவருமொரு வடுச்சொல்லக்கூடாது
நீரிலே யோடி நினைத்தவிடம் போகுமந்தக்
கண்ணி விராலைக் கணுக்காலுக் கொப்பிடலாம்
தங்கமய மேனியுள்ள தையலிளங் குயிலின்
மங்கைகணுக் காலுக்கொரு வகைசொல்லக் கூடாது
கட்டவிழ்த்துப் பாருமென்பார் காசினியில் மானிடர்கள்
பொத்தகத்தை யென்றும் புறங்காலுக் கொப்பிடலாம்
அழகான மங்கையரி னவையவங்க ளொவ்வொன்றையும்
பழுதுசொல்லக் கூடாது பாவைபிறங் காலையுமே
இப்படிப் பட்டதொரு எழில்பெண்ணைக் கண்டுவந்தேன்
தப்பா தவளைச்சிறை நானெடுக்க வேணுமடி
வேஷத்தை மாற்றியே வேவிவந்தீ ரென்னிடத்திற்
பாவையரே நீங்களுங்கள் பதிதனக்குப் போய்விடுங்கள்
அவ்வார்த்தை கேட்டவுடன் ஆரணங்கு தாதியர்கள்
செவ்வையாய் வேந்தனுக்குச் சிலமொழிகள் செப்பலுற்றார்
ஐயையோ மன்னவென் அழகுதுரை ராசாவே
முன்னாளிலே நடந்த முறைமையொன் றைக் கேளுமையா
சீதையினா லிலங்கை திசையழிந்து போனதுவும்
கண்ணகியால் மதுரை கட்டழிந்து போனதும்
துரோபதையால் குருநாடு சோரமாய்ப் போனதும்
பூசணியா ளாலேகண்டி பிடிபடுங்காண் என்றார்கள்

கண்டியழிந் தாலும்பெண்ணால் கால்மாறிப் போனாலும்
நகரி யழிந்தாலும் நமதுதிசை மாறிடினும்
பூசணியைச் சேராமற் போவேனே யாமாகில்
இலங்கைமன்ன னென்றென்னைச் சொல்லாதே பெண்ணாரே
வேண்டாமென் ராசாவே வேகமெல்லாம் நீர்தணியும்
பூசணிக்கு ஆசைவைத்தால் பிடிபடுமே கண்டியென்றாள்
வாளா லரிந்திடுவேன் வன்கொலைகள் செய்திடுவேன்
நாய்க்கு விருந்தாக்கிடுவேன் நங்கையரே உன் சதையை
நீங்க ளிருக்குமந்தப் பாங்கான அரண்மனைக்கு
நிற்காது போங்களடி நெட்டூர நீலிகளே
அவ்வார்த்தை கேட்ட பெண்கள் அநியாயம் வருமென்றெண்ணித்
தையலர்க ளெல்லோரும் தன்மனைக்குச் சென்றார்கள்
மந்திரியைத் தானழைத்து மன்னசிங்க னேதுசொல்வேன்
மாதுநல்லா ளாசையெந்தன் மனதிலே நிற்குதுதான்
கன்னியிளங் குயிலாளென் கண்ணெதிரே தோற்றுகிறாள்
என்னவித மாகவந்த ஏந்திழையை நீரெடுப்பீர்
அவளைச் சிறையெடுக்க அன்பான மந்திரியே
யோசனை யொன்றெனக்கு உபாயமாய்ச் சொல்லடா நீ
பூசணியை யென் வசம்நீ பிடித்துத்தருவாயென்றால்
எங்நகரி லுந்தனுக்கு ஏற்றபடி தந்துவைப்பேன்
அவ்வார்த்தை தனைக்கேட்ட மந்திரியு மேகிசொல்வான்
பூசணிக்கு ஆசைவைத்தால் பிடிபடுங் கண்டியென்றான்
மீண்டுமதை மந்திரியே மிகப்பழுது சொல்லாமலே நீ
போயழைத்து வாருமந்தப் பொற்கொடியாள் பூசணியை
காட்டானை காவலையா காடிபுலி காவலங்கே
கோட்டையைச் சுற்றியே கொடியசிங்கங் காவலுண்டு
வேட்டைநாய் காவலந்த வீரியஞ்சேர் பூங்கொடியாள்
வாசலுக்குப் போகமனம் அஞ்சுதையா மன்னவரே
வேங்கைக் கெதிரேநின்று வீரியங்கள் சொன்னாலும்
என்னெதிரே நின்றுமந்திரி எதிர்மொழிகள் பேசாதே
வேங்கைக்கிரையாக வெட்டியுன்னைக் கொடுத்திடுவேன்
பாங்கான பூசணியைப் பார்த்தழைத்து வாருமடா
இவ்வரச னாலேகண்டி இன்றே யழியுமென்று
மந்திரியு மோசித்து மன்னவனுக் கீதுரைப்பான்
கேளுமெந்தன் ராசாவே கீர்த்திபெற்ற மன்னவரே
ஆலப்பிள்ளை தன்னையிவ்வூர்க் கதிபதியாய் வைத்திரே
அவனைப்பிடித்து வேறோ ரயலூர்க் கனுப்பிவிட்டால்
கூசாமற் கொண்டுவந்து கொற்றவனே நான்தருவேன்

## கண்டிராஜன் ஒப்பாரி

மெய்தானோ இதுவென்று விசாரமுற்று அந்தமன்னன்
இங்கேவா மந்திரியே யினியவொரு வார்த்தைசொல்வேன்
கள்ளக் கடுதாசியொன்று காரியமாய் நானெழுதித்
தாரேனவ் வாலப்பிள்ளை தனையழைத்து வாடாநீ
ஐயாவே நானுமந்த ஆலப்பிள்ளை யென்பவரைப்
போயழைத்து வாறேனென்று போறானே மந்திரியும்
வாசல்தனைக் கடந்தவனு மற்றுமிடங் கடந்து
வீதி கடந்துமே வேந்தர்தெருத் தான்கடந்தான்
எல்லாத் தெருக்களையும் எட்டி நடந்து அந்த
ஆலப்பிள்ளை வாசலிற்போய் நின்றானே மந்திரியும்
பூந்தோட்டம் போல்பார்த்துப் புகழ்பெரிய ஆலப்பிள்ளை
வந்தங்கே நிற்கையிலே மந்திரியைக் கண்டானே
கண்டவுடன் மந்திரியைக் கைதனிலே தான்பிடித்து
ஏன்வந்தாய் மந்திரிநீ யிங்கென்னிடத்தி லென்றான்
வந்த கருமத்தைநீ மந்திரியே யெந்தனுக்குச்
சிந்தையுடன் வாய்திறந்து செப்புவீரென்றானே
சொல்லுகிறேன் கேளுமையா சூந்தவொரு சேதிதன்னை
ஆலப்பிள்ளை ராசாவே அன்பான படைத்தலைவா
கர்னல் துரை யேயெவருங் கண்டவுடன் தெண்டமிடும்
விக்கிரம சிங்கனெனும் வேந்த னுரைத்தமொழி
வத்துவா ஸ்கையிலிருந்து வந்தகடுதாசி யதை
வாசிக்கவும்மை வரச்சொன்னார் சிங்கமன்னர்
நீர்வாரு மையாவென்று நேசத்துடனே சொல்லி
வாய்பேச்சில் லார்மலங்கு வணங்கிநின்றான் மந்திரியும்
வாறேநா னென்றுசொல்லி ஆலப்பிள்ளை அந்நேரம்
அரசனரன் மனைபோக அணிந்தா னுடுப்புகளை
பலவர்ண மானதொரு பட்டயத்தைத் தான்தரித்துப்
பூந்து புறப்பட்டு வாறாரே ஆலப்பிள்ளை
வெள்ளிக் கசையடிக்க வெண்சாமரை யிரட்டத்
துள்ளுமட வார்கள்நின்று சோபனங்கள் கூறிவர
வன்னியமார் நடக்க மற்றுமுள்ளோர் சூழ்ந்துவர
வந்தானே ஆலப்பிள்ளை வாழ்வேந்தர் வாசலுக்கு
கண்டவுட னோடிவந்து கைதனில்ரா சாபிடித்து
மண்டபத்திற் கொண்டுபோய் வாசகத்தைச் சொல்லுகிறாக
எந்தோளா அதிகாரி ஏற்றதுணைப் படைத்தலைவா
நான்சொல்லுஞ் செய்திதனை நன்றாகக் கேளுமையா
நகர்பிடிக்க வென்றிதிலே நன்றாய் வரைந்துளது
பாருமையா கடிதத்தைப் படைத்தலைவா என்றானே

சொல்லியபின் இலங்கைமன்னன் துணையேநீ ரிப்பொழுது
ஆறுமாதம் வரைக்கும் அங்குபோய் நில்லுமென்றார்
நான்போறே னென்றந்த ராசனுக்குச் சொல்லியபின்
பிறவிடுதிப் பட்டவரும் போனாரே ஆலப்பிள்ளை
போகையிலே மருமகளார் பூங்குழலைத் தானினைந்து
பூசணிக்குப் புத்திசொல்லிப் போவோமென்று போனாரே
ஆலப்பிள்ளை வருமதிர்ச்சி அறிந்திட்ட தாதியர்கள்
ஓடோடியுஞ் சென்று உரைத்தார்கள் பூசனிக்கு
அதைக்கேட்ட பூசணியாள் அதிக மனங்கலங்கி
விழுந்து புரண்டழுது மெல்லியரு மந்நேரம்
நெருப்பை வளர்த்ததன்மேல் நெய்யைச் சொரிந்ததுபோல்
படுப்பா ளெழுந்திருப்பாள் பஞ்சணைமேல் தூங்கிடுவாள்
எந்த னம்மான் வருகிறது என்னென்ன வஞ்சனையோ
இதுபுதுமை நானறியேன் எந்தனருள் தோழியரே
எனதம்மா னவர்களுக்கு எழிலுடைய நல்லதொரு
ஆசனத்தைப் போடுமடி ஆயிழையே நீங்களென்றாள்
சொன்னவுடன் தோழியர்கள் சுறுக்கா யெழுந்திருந்து
பொற்கட்டில் கவுச்சிகளைப் போட்டாரே ஆயிழைமார்
ஆசனத்தில் வந்தவரும் அமர்ந்திருந்த பிற்பாடு
மறைந்துநின்ற மாதுநல்லாள் மாமனுடனே யுரைப்பாள்
தாயோடு நீர்பிறந்த தார்வேந்தே மாமாவென்
வாசலிலே கால்நோக வந்ததென்ன சொல்லிடுவீர்
தங்கச்சி பெற்றெடுத்த சந்திரன்போ லானவுன்னைச்
சந்திக்க வந்தேனம்மா தைய லரசியரே
பொன்னி னரம்பையரே பூவையரே மருமகளே
புத்தியுனக் கொன்றுசொல்லிப் போகநா னிங்குவந்தேன்
என்னபுத்தி யம்மானே யெனக்குநீர் சொல்லவந்தீர்
வாய்திறந்து சொல்லுமம்மான் வணக்கமாய் நாண்கேட்பேன்
வத்துவா கைக்குயென்னை மன்னசிங்க னேவிவிட்டான்
போறேநான் போர்க்களமுன் புத்திபோல் நீயிருப்பாய்
என்ன நினைவுகொண்டு இவ்வார்த்தை நீருரைத்தீ
ரென்னையிங்கு தனிவிட்டுப் போறீரோ நெடுந்தூரம்
நெல்விளையும் வயலுக்கு நேர்மையாய் வைத்தவேலி
பொல்லாதவர்கள் கொத்திப்புகுந்துகொள்ளை கொள்வதுபோல்
கொத்திவிட்டுப் போறீரென்னைக் கொள்ளைகொள்ள வேயினிமேல்
யாரார் வருவாரோ நானறியே னம்மானே
கண்டிநக ரழிந்தாலுங் கால்மாறிப்போ னாலுமுந்தன்
கற்புநெறி தவறாமலேநீ காப்பாற்றிக் கொள்ளுமம்மா

எந்தனுற் சொல்ல இனியெனக்குக் கூடாது
நான்போறே னென்றவரும் நற்பயணஞ் சொன்னுரே
ஆறுமுகங் காப்பார் அடியாளின் மானமதைப்
போய்வாரும் மாமாவே பொழுதாகிப் போகுதென்ருள்
அவ்வார்த்தை கேட்டுமல்லோ ஆலப்பிள்ளை மணங்கலங்கி
எண்ணுத வெண்ணமெண்ணி எழுந்தவருஞ் சென்றுரே
வீதிகடந்தந்த வேந்தர்தெருத் தான் கடந்து
தானிருக்கு மாளிகைக்கு வாருரே ஆலப்பிள்ளை
அவர்வாற கெம்பீரத்தைக் கண்டந்த மங்கிலியம்
ஓடிவந்து மன்னவனை யொருவாறு பார்த்துரைப்பாள்
ஐயையோ மன்னுவென் அழகுதுரை ராசாவே
இந்நாளிவ் வாசலுக்கு ஏகிவந்த காரணமேன்
தாமரைப் பூப்போற் றளருமே மேனியெல்லாம்
இன்றைக் கிலேபோ விளைந்திருப்ப தேனென்ருள்
என்பெண்ணே யிளங்கிளியே பூவையரே கேளுமடி
என்னை யிலங்கைமன்னன் ஏவிவிட்டான் போர்க்களத்தில்
எந்தன் மருமகளுக் கினியதந்தை யாருமில்லை
போறேனு னிப்போது புத்திபோல் நீயிருப்பாய்
கண்குறையப் பாராதே கன்னியிள மின்னுரைப்
போறெனென்று ஆலப்பிள்ளை பிறவிடுதிப் பட்டாரே
போறீரோ மன்னுநீர் புத்தியொன்றுஞ் சொல்லாமல்
வாறதுநீ ரெப்பவென்ருேர் வார்த்தைசொல்லிப் போங்களையா
வருவேன்பெண்ணே சீக்கிரமென் மக்கள்மைந்த ரெல்லோரும்
பாதனம் பதனமென்று போருரே ஆலப்பிள்ளை
அப்போர்வேந்தன் தன்னுடனே போனவர்க ளாரென்றுல்
வில்லம்புக் காரர் வெடிதுவக்குக் காரர்களாம்
இன்னுங் கள்ளர்மறவர்களும் கைபீட்டிக் காரர்களும்
சோனர் துலுக்கர்களும் தொளும்பட்டா னிகர்களும்
காப்பிலிமார் வேடர் கண்கொள்ளச் சேனைகளும்
கடல்போலவே முழங்கிக் கதித்துமே சென்றதப்போ
தம்பட்ட மல்லாரி தாரைசின்னந் தான்முழங்க
அம்பட்ட மார்களும் அடர்ந்து மிகநெருங்க
குடிப்பட்ட வண்ணுர்கள் கூடிப்பா வாடையிடச்
சென்றுரே யாலப்பிள்ளை சேர்ந்தபடைச் சனத்துடனே
எட்டுநாள் தூரம் இவர்களதான் போனபின்பு
திட்டமுடன் சிங்கமன்ன னச்சேபிழைக்குத் தூதுவிட்
மந்திரியைத் தானழைத்து மன்னசிங்க னேதுசொல்வான்
மாதுநல்லாள் பூசணியை மறக்கவுங் கூடுதில்லை

வாயிதழைச் சுவித்து மருவியணைந் திடுவதற்குப்
போயழைத்து வாருமென் புத்தியுள்ள மந்திரியே
ஐயாநீர் பூசணிமே லாசைவைத்தீ ராகுக்கால்
மெய்யாகக் கண்டிக்கு விளையுங் கெடுதியென்றான்
ஆலப்பிள்ளை யதிபதியை அயலூர்க் கனுப்பிவைத்தால்
சாலமாய்ப் பூசணியை நானெடுத்து வருவேனென்றாய்
மீண்டுமந்த வார்த்தைகளை மிகப்பழுது சொல்லாமல்
போயழைத்து வாருமந்தப் பொற்கொடியாள் பூசணியை
அரசனாற் கண்டி யழிவே போகுதென்று
தானினைந்து மந்திரியும் போயழைத்து வறேனென்றான்
சொன்னதின் பின்னாலே சுறுக்காகவே யெழுந்து
போறானே மந்திரியும் பூசணியாள் தன்மனைக்கு
வாசல் கடந்தல்லோ மற்றுமிடந் தான்கடந்து
வீதிகடந்து மற்ற வேந்தர்தெரு வுங்கடந்தான்
எல்லாத் தெருக்களையுங் கெதியாய்க் கடந்தந்தப்
பூசணியாள் மண்டபத்திற் புகுந்தானின்றான் மந்திரியும்
கண்டவுடனே யந்தக்கரிகையு மோடிவந்து
ஏன்வந்தா யண்ணா நீ யிங்கென் னிடத்திலென்றாள்
வந்த கருமமதை வாய்திறந்து அண்ணாவே
சிந்தையுடன் சொல்லுமென்று செயிளையுங் கேட்டாளே
நல்லமன தோடுநமக்கு நான்வந்த காரணத்தைச்
சொல்லுகிறேன் தங்கையேநான் தோகையரே பூசணியே
விக்கிரம சிங்கனெனும் வேந்தனிங்கு வந்தபோது
கண்டுமனங் குளிர்ந்து காதலுன்மேல் கொண்டாரே
வரச்சொன்னா ரம்மாவுன் மனதுதான் சம்மதியோ
பிள்ளைச் சலிமனமோ சொல்லெனக்குத் தங்கையரே
அவ்வார்த்தை கேட்டந்த மங்கைநல்லா ளேதுசொல்வாள்
சொல்லுமண்ணா ராசனுக்குச் சோகமிக வேண்டாமென
வாலைப் பருவமுள்ள வன்சிறிய பிள்ளையண்ணே
காளைப் பருவமென்று கன்னிசொன்னா ளென்றுரையும்
அம்மான் வருமளவும் அரசர் மனம்பொறுத் துச்
செம்மையோ டேயிருந்தாள் சிந்தனை போலவேதான்
மணம்புரிந்து இருபேரும் வாழ்ந்து யிருப்போமென்று
சொல்லு மண்ணே ராசனுக்குத் துன்பமிக வாராமல்
வார்த்தைதனைக் கேட்ட மந்திரியு மோடிவந்து
மன்னவனோ டேதுரைப்பான் மதிமைச்ச னந்நேரம்
மங்கைநல்லாள் சொன்னசொல்லை மன்னவனே கேளுமையா
வாள்போலுங் கண்ணாளும் வார்த்தையெல்லாம் நல்லதென்றான்

மாமன் வருமளவும் மன்னர் பொறுத்திருந்தால்
மணமுடித்தும் புவியில் வாழ்ந்திருப்போ மென்றாளே
வார்த்தைதனைக் கேட்ட மன்னசிங்க னேதுசொல்வான்
வாடாயென் மந்திரியொரு வளமானசெய்திசொல்வான்
கண்டியிலே பாதி கணக்காய்க் கொடுப்பேனென்று
மங்கையர்க்குச் சொல்லி வரவழையும் சீக்கிரமாய்
ஆணிமுத்து மாலைகளும் அழகுமணி மண்டபமும்
வேணுமென்ற ஆபரணம் மெல்லியர்க்கு இப்பொழுது
அன்பாகத் தருவேனென்று ஆசைமொழி போய்ச்சொல்லிட்
பூசணியை யிங்கே பிடித்துநீவா மந்திரியே
வார்த்தைதனைக் கேட்டந்த மந்திரியு மோடிவந்து
மங்கையரோடே மதியமைச்சன் சொல்லலுற்றான்
சொல்லுமண்ணே ராசனுக்குத் தோகைநான் சொல்லுவதைக்
கண்டிநகர் வேண்டாமாம் கனத்தபணி வேண்டாமாம்
அடியாளோர் வார்த்தையொன்று அம்மானுக் குரைத்ததினால்
அம்மானிங்கு வரட்டுமென்றவ் வரசனுக்குச் சொல்லுமண்ணே
சொன்னதைக் கேட்டவுடன் மந்திரியுமோடிவந்து
மன்னவனைக் கண்டு மலர்க்கையால் தெண்டனிட்டான்
நல்லது மந்திரியே நடந்த கதைகளெல்லாம்
சொல்லுநீ எந்தனுக்குச் சுருக்காக நானறிய
அம்மானுக்கோர் வார்த்தைநான் அன்பாகச்சொன்னதினால்
அவர்வரட்டு மென்றந் ஆயிழையுஞ் சொன்னதுவே
அவ்வரச னிதைக்கேட்டு அதிக கிலேசமுற்று
மந்திரியோ டந்த மன்னசிங்க னெடுத்துரைப்பான்
சென்றுநீ ரங்கேபோய்ச் சேயிழைக் கண்டெங்கள்
மன்னனுமை யொன்றுஞ் செய்யவில்லை யென்றுசொல்லும்
கண்ணாலே காணுதற்குக் கனசேட்டை யாயிருக்கா
மென்றுசொல்லிக் கைப்பிடியாய்க் கொண்டுவா சீக்கிரமாய்
மனங்குளிர்ந்த வார்த்தைதனை மந்திரிகேட் டோடிவந்து
அந்தமங்கை யாரோடே அவ்வமைச்ச னீதுரைப்பான்
உன்னையொன்றுஞ் செயவில்லைபா மந்தமன்ன னம்மாவைக்
கண்ணாலே காணுதற்குக் கனசேட்டை யாயிருக்கும்
மன்னன்வரச் சொன்னாரம்மா மனதுக்குச் சம்மதமோ
என்னசலிமனமோ எனக்குச்சொல் தங்கையரே
சொல்லுமண்ணே ராசனுக்குத் தோகையுரை மொழியதனை
என்னையொன்றுஞ் செய்வதில்லை என்றாரே யந்தமன்னன்
மதங்கொண்ட யானையொன்று வந்தெதிரே நிற்குமென்றால்
கரும்பைக் கொடுத்தாலது கடியாமல் தங்கிடுமோ

மன்னன்மதங் கொண்டிருந்தால் மருவாதெனை விடுவானே
சொல்லுமண்ணே நீர்நல்ல புத்தியொன்று ராசனுக்கு
எந்தனம்மான் வந்தபின்பு இருபேரும் சேர்ம்வாமென்று
அந்தமன்னராசனுக்கு அன்பாகச் சொல்லுமென்றாள்
மாதுசொன்ன வார்த்தைகளை மந்திரியுங்கேட்டுவந்து
நீர்கேளும் ராசாவே நேசமங்கை வாய்மொழியை
மாமனிங்கு வந்தபின்பு மருவியுரு பேருமதாய்ச்
சீவித் திருப்போமென்று ராசனுக்குச் சொல்லுமென்றாள்
இதைக்கேட்ட வேந்தனவன் எழுந்துகெம் பீரமுடன்
சட்டென்று உட்சென்று பெட்டகத்தி லொன்றெடுத்தான்
பட்டு வகைகளும் பலதுயில்களும் அடுக்கி
ஆபரண மெல்லா மடுக்கியே பூட்டிவைத்து
மந்திரிகைபிற் கொடுத்து மாதுக்கிதைத் தரித்துப்
பொற்கொடியாள் பூசணியைப் பிடித்துவா என்றானே
பெட்டகத்தைக் கொண்டுபோய் பொற்கொடியாள் முன்னே
நின்றானே மந்திரியும் நேரிழையாள் பக்கமதில் [வைத்து
சாவியைத் தானெடுத்துத் தையல்லாள் தான்திறந்து
பார்த்தாளே பெட்டகத்தைப் பட்டுப் பணிகளெல்லாம்
லேசமிக வுண்டாகிக் கீழே புரண்டழுது
மெல்லியரு மேதுசொல்வாள் மேன்மையுள்ள மந்திரிக்கு
இதுவரையிற் சொன்னசொல்லை இலங்கைமன்னன் கேட்கவில்லை
புத்தியில்லையோ வந்தப் போரிலங்கை மன்னனுக்கு
நான்சொன்ன கதையாலே ராசனுக்கு ஓரறிவும்
இன்னும் வராம லிருப்பதை யானறியேன்
கல்லு முருகுவிடும் காதுந் திறந்துவிடும்
மன்னனுடை நெஞ்சிலே மறுபுத்தி தானிலையோ
நல்லவனுவா னவன்காண் நாராயணன் கீழ்சாதி
நான்சொன்ன சொல்லையெல்லாம் நன்மனதிற் கேட்கவில்லை
எந்தமட்டு மண்ணா நீ இன்பமாய்ச் சொல்லிவந்தீர்
அந்தற்ப புத்தியோனை அரசினிலும் வைக்கலாமோ
கொச்சிவழு தலையுமவன் கூறுகின்ற பூசணியும்
விற்றவனுந் தின்றபுத்தி விலகவில்லை நெஞ்சைவிட்டு
சும்மா யிருந்தவனைச் சுந்தரஞ்சே ரென்மாமன்
கண்டி அரசாளக் கனமாக வைத்ததினால்
வேலிக்கு வைத்தமுள்ளுக் காலுக்குத் தைக்குமென்று
காசினியோர் கதைப்பதைக் கண்டேனே யென்னளவில்
யானையுடன் யானை அடர்ந்து புணராமல்
பூனையுடன் யானை புணருமோ பூவுலகில்

102613

பொன்னோடு பொன்சேர்த்துப் பொருந்தவேலை செய்யாமல்
செம்போடு பொன்னுமொன்றாய்ச் சேருமோ யிவ்வுலகில்
கள்ளப்பயல் தன்னைவந்து கண்டுகொள்ளச் சொன்னானே
வழிசற்பய லென்னையவன் வாழவரச் சொன்னானே
என்று சினந்தெழுந்து எழில்முகத்தா ளன்னேரம்
கட்டோடே புல்லுவைத்தாள் கங்கிலியச் சிலைவைத்தாள்
தூதுகையிற் கொடுத்திந்தத் தொடுசெருப்பா லடிப்பேனென்று
சொல்லுவண்ணே ராசனுக்குச் சேராமல் நீர்மீண்டும்
திரும்பிநீர் வந்தால்தான் தீண்டுவேனுன் சதையையென்று
மந்திரியை அனுப்பிவிட்டாள் மங்கைநல்லா ளன்னேரம்
மனதி லதிகமதாய் மனக்கவலை யுண்டாகிப்
பஞ்சணை மெத்தையிலே பள்ளிக்கொண்டாள் பூசணியும்
பெட்டகத்தைத் தானெடுத்துப் புத்தியுள்ள மந்திரியும்
எண்ணாத வெண்ணமெண்ணி ஏங்கிமனம் புண்ணானான்
நல்வார்த்தை சொன்னாளே நாட்டிலங்கை மன்னனுக்கு
என்று மனங்கலங்கித் தியக்கமுற்று மந்திரியும்
பெட்டகத்தைக் கொண்டுவந்து பேசாமல் வைத்துவிட்டு
நின்றானே போரிலங்கை மன்னனுக்கு முன்பாகக்
கண்டா னிலங்கைமன்னன் கண்ணிரண்டும் பொறிப்பறக்க
நின்றுமிகப் பற்கடித்து நேரிளைமேற் கோபமுற்றான்
எங்கருக் குள்ளிருந்து இழிமொழிகள் சொன்னவளைக்
கொன்று விடுவேன்நான் கொலைகழுவில் வைத்திடுவேன்
என்னை அவ ளாரென்று எண்ணினளோ நானறியேன்
நாக்கை யிழுத்தறுத்து நாய்நரிக்குப் போடுவிப்பேன்
என்பேறுஞ் சொல்லியிப்போ இவ்வுலகம் போனதென்றால்
என்னமதி கொண்டு இருப்பேனடா மந்திரியே
காகங் கரையாது கன்றுமுலை தொட்டுண்ணா
நாகம் படம்விரித்து நன்றாக ஆடுமோதான்
காட்டின் குருவிபட்சி கனிந்தபழந் தின்னாது
பன்றிக் குரங்குதின்னிப் பச்சோ டுடும்புதின்னி
சின்னமுள்ள சிங்களத்தி சேராமலென்னை யவளும்
என்னையிழி வாகவவள் ஏசி யனுப்பினளே
விடியட்டும் நானுமந்த வேசையரைத் தான்பிடித்து
மங்கையர்கள் சிரிக்கவொரு மானபங்கஞ் செய்யவென்றான்
சொல்லியபின் ராசனுக்குச் சோகமிகவாகிப்
பஞ்சணை மெத்தையிலே பள்ளிக்கொண்டா னிலங்கைமன்னன்
இம்மொழியைத் திசைமார்கள் இனிதாகத் தானறிந்து
இந்நக ரழியுமென்று ஏகியவ ரோடிவந்து

அம்மாவுக் கிம்மொழியை அறிவிப்போ மென்றவர்கள்
மறைவாக நின்றந்த மங்கையரோ டீதுரைப்பார்
பூசணியே தங்கையரே புத்தியொன்று சொல்வதைக்கேள்
விடிந்துநீ ரிங்கிருந்தால் வேந்தனும்மைப் பழிசெய்வான்
பொழுது விடிவதற்குள் போய்விடுவுன் மாமனிடம்
என்றவர்கள் புத்திசொல்லி ஏகினா ரெல்லோரும்
அவ்வார்த்தை தனைக்கேட்டு அந்தமங்கை நல்லாளும்
ஓவ்வா மனத்துயரால் ஓண்டோடியும் சொல்லுகிறாள்
எனக்குத் துணையாக ஏந்திலையீர் தாதிகளே
வாருங்கோ நீங்களென்று மங்கையரு மழைத்தாளே
மழைக்காலிருட்டதிலே மண்மீதிலே நடந்து
மாமியிடம் போனாளப் பூசணி மாதுநல்லாள்
மாமியினைக் கண்டவுடன் மனதுமிகக் கலங்கி
அன்னநடைச் சின்னவிடை அழகு மருமகளே
பொன்னின்மலர்க் கால்நோகப் பூவையரே யிங்குநீ
வந்த கருமமதை வாய்திறந்து சொல்லுமம்மா
அம்மானுக் கேற்றவென் னழகுடைய மாமியாரே
பொல்லாத விக்கிரமன் பெண்ணுக்கெனைக் கேட்டானே
மோகமிக்க கொண்ட மூடனங்கு வாராமல்
ஆகாக் கருமமென்று அனுப்பிவிட்டு வந்தேனம்மா
கேட்டு மனங்கலங்கிக் கிலேசமிக வுண்டாகி
விழுந்துபுரண்டழுதந்த மெல்லிநல்லா ளேதுசொல்வாள்
இங்கிராதே பிள்ளையரே ஏந்திளையே பூசணிநீ
பொழுது விடிவதற்குள் போய்விடுவுன் மாமனிடம்
எப்படிநான் போவேனம்மா இருளடைந்த வனந்தனிலே
தப்பிதங்கள் வந்திடுமோ தனியேநான் போவேனோ
என்று மனங்கலங்கி ஏந்திழையு மங்நேரம்
என்னோடு வாறதுதந்த இன்பமுள்ள தாதியேகேள்
நஞ்சு புசித்தாலும் நம்மிருவர் தம்மினிலே
வஞ்சித் தொருநாளும் மறந்துநான் புசியேனடி
தாதியரோ டவளும் சகலவகை பேசியபின்
வாருங்கள் நீங்களென்று மங்கையரு மங்நேரம்
தண்டைகளும் பீலிகளும் தங்கச் சரப்பளியுங்
கொங்கைக்குக் குச்சணிந்து கூர்விழிக்கு மையெழுதி
நெற்றிக்குப் பொட்டுமிட்டு நீலரத்ன காப்புமிட்டு
தங்கநிறப் பல்லக்கில் தையல்நல்லா ளேறினளே
வன்னியமார் நடக்க மற்றோருஞ் சூழ்ந்துவரப்
பொன்னனைய கன்னியரும் போனாள் புறந்தனிலே

கண்டி நகர்கடந்து கனத்தவனந் தான்கடந்து
நந்தா வனங்கடந்து நல்லதிசயம் பார்த்தாள்
இருட்டு வனந்தனிலே ஏந்திழையாள் போகையிலே
பொழுது விடியுதென்று புள்ளினங்கள் பறந்திடுமாம்
அந்த அதிசயத்தை கண்டுமே ஆரணங்கு
நெடுந்தூரம் போனாளே நேர்மையுள்ள பூசணியும்
மங்கை வனந்தனிலே வருகையிலே யந்நேரம்
குஞ்சரங்கள் கண்டு கூவென்று தான்துரத்தும்
துரத்தி வருகையிலே தோகைபூ சணியைவிட்டு
ஓடினார் தாதியர்கள் ஒருமிக்கத் தான்திரண்டு
கையூதி மெய்நடுங்கர் காலுதைத்து ஓடிவரும்
எழிலுள்ள யானையைக்கண் டேந்திழை பூசணியும்
கண்டிக்கு நாளும் கனகாலம் வந்ததென்றால்
ஆனேறே குஞ்சரமே ஆபிளையால் சொல்லுகிறேன்
என்னையொருவனுக்கு என்தாயும் பெற்றதென்றால்
பத்தினியென் றென்னைப் பலபேருஞ் சொல்லுகிறார்
என்தாயே ஆனேறே குஞ்சரமே என்னைநீ
கொல்லாதே இன்னேரம் கொல்லாதே யென்றழுதாள்
காதை விசிக்கியதுகட்டழகி சொற்கேட்டு
வாதுபண் ணுதுகரி வனத்துக்கு ஓடினதே
குஞ்சரத்தைக் கண்டந்தக் கோதைபயத் தாலேவிழ
அந்தஇளம் பெண்ணுடனே வந்தமற்றோ ரோடிவந்து
மங்கையரைத் தூக்கியே மார்போடு தானணைத்துத்
தேற்றி யெடுத்தவுடன் திருநூற்றுக் காப்புமிட்டார்
அந்த வனத்தைவிட்டு அன்பாகத் தாதியர்கள்
சீக்கிரமாய் கொண்டவர்கள் சென்றாரே சேயிழையை
நெல்லுவனம் புல்லுவனம் நெற்றேப்பு நீர்கடந்து
காடுமலை புற்பூண்டு கனத்தவனமுங் கடந்து
எட்டுநாட் பயணமதை எட்டுமணிக்குள்ளாக
வந்துவா கையாற்றைக் கண்டாளே மாது நல்லாள்
தாளமுள்ள கங்கையது தான்போகக்கூடாது
எப்படிதான் போவதென்று ஏங்கிநின்றா ரெல்லாரும்
அங்கோர மங்கைநல்லா ளதிகமனஞ்சலித்துக்
கங்கைக் கரையில்வந்து கனிமொழியாள் நின்றுசொல்வாள்
கங்கையரே தங்கையரே கன்னியான் சொல்லுகிறேன்
அன்றுசந்திர மதியுடனே அரிச்சந்திர ராசாவும்
காசி நகருக்குக் கடனிறுக்கப் போகையிலே
அக்கினி யாறென்றைக்கடந்து அப்பாலே போனார்கள்
மந்திரியும் போனான் வருகுது கங்கையென்று
மன்னவருஞ் சொன்னாரே மதிசொல்லுச் சரியென்று

மூவரையுந் தானிருத்தி முன்போனாள்சந்திரமதி
அக்கினியாற்றைக்கடந்து அப்பாலே போனார்கள்
அதுபோலக் கங்கையரே அன்றந் தக்கினியாறு
அவர்க்குவழி விட்டாற்போல் அடியாளுக் கிப்பொழுது
மனத்துயரை தீர்ப்பதற்கு மாதுநா னிங்கு வந்தே
னென்தாயே கங்கையரே யெனக்குவழி தாருமென்றாள்
ஓடியந்தக் கங்கை யுடனே சுழிமாறித்
திட்டிவளர்ந்து திடரெல்லாம் மண்மேவி
வந்த சனமுமந்த மங்கையரு மாய்நடந்து
ஆற்றைக்கடந்தவர்கள் அப்பாலே போகையிலே
மாற்றான் படையொன்று வருகிற தென்றறிந்து
தன்படையே ஆலப்பிள்ளை தானனுப்பி விட்டானே
பகைகளைக் கண்டவுடன் பதறி மணங்கலங்கித்
திகைத்தந்தக் கன்னியரும் சேயிழைக்குச் சொல்லலுற்றாள்
அம்மான் படையே நம்மை அழிக்க வரும்படையோ
எந்தப் படையோவென்று ஏங்கினின்றா ரெல்லோரும்
கன்னியவ ளிறங்கிக் கருத்தாக வெளியில் நின்று
பார்த்தாளே யுற்றதனைப் பண்புடைய பூசணியாள்
தென்றல் வந்து வீசச் சேயிளையாள் வாசமது
ஆலப்பிள்ளை மூக்கில் அப்போது வீசினதே
இந்தமன முடைய ஏந்திழைமா ராருமில்லை
இதுயெந்தன் மருமகள்தா னென்று மவனெண்ணலுற்று
அஞ்சலென்று தன்படையை யமர்த்தியபின் னாலப்பிள்ளை
கண்டான் மருமகளைக் கன்னியிளந் தோகையரை
மறைந்தாளே வெட்கியந்த மாதுநல்லா ளப்போது
அன்னநடைச் சின்னவிடை அழகுமரு மகளேநீ
காடுகடந் தறியாய் கனத்தவனந் தானறியாய்
வீடுவிட்டு மருமகளே வெளிக்கிட்டும் நீயறியாய்
நெல்லு கனமறியாய் நெற்றோப்புத் தானறியாய்
புல்லு வனமறியாப் புற்பூண்டுங் கண்டறியாய்
இந்த விருள்வனத்தால் ஏன்வந்தாய் மருமகளே
வந்தகரு மத்தையுன் வாய்திறந்து சொல்லுமம்மா
தாயோடு நீர்பிறந்து தார்வேந்த ரம்மானே
உம்மோடு சொல்வதற்கு வுடல்மெத்தக் கூசுதம்மான்
தோழியரைக் கேளுமென்று சொன்னவுடன் பாங்குயர்கள்
அந்நேரம் பெண்களெல்லா அழுதுவிழுந் தேயுரைப்பார்
நீரிங்கு வந்தபின்பு நிட்டூர விக்கிரமன்
அம்மாவை மணம்புரியக் கேட்டானே அந்தழிவான்
அதனால் மனத்துயரம் கொண்டுங்கள் மருமகளார்
ஆகாக் கருமமென்று அனுப்பிவிட்டு வந்தோமையா

கேட்டவுட னாலப்பிள்ளை கிலேசமிக வுண்டாகி
நெறுநெறன்று பற்கடித்து நின்றவனுமேதுசொல்வான்
பெண்ணாலக் கேட்டவனைப் பூமியில்வைப் பேனோவந்தக்
கள்ளப் பயலைநான் கட்டி யடிப்பேனென்றான்
அங்கே யிருந்தேனென்றாள் அந்தக்கீழ்சாதியைநான்
செங்கையினாற் றாக்கிச் சிதற அடிப்பேனே
தலையை யுடைத்தவனைத் தரையிலே போட்டுநான்
காலா லுதைத்துநான் கழுவிலே வைத்திடுவேன்
நல்லதிருக் கட்டுமம்மா நல்விடுதி போங்களென்று
விட்டானே ஆலப்பிள்ளை வீரியமா யந்நேரம்
விடுதிக்குப் போகையிலே விவேகமுள்ள பூசனியாள்
நடந்தவருத்தமல்லோ நான்சகியேன் தாதியென்றாள்
பசியாறி நீங்களெல்லாம் படுத்துறங்கு மென்றுசொல்லிப்
பஞ்சணை மெத்தையிலே பள்ளிக்கொண்டாள் பூசணியும்
பசியாறித் தோழியர்கள் படுத்துறங்கும் வேளைபது
பார்த்திருந்த பூசணியாள் பையவே யெழுந்துவந்து
ஆற்றில்விழ வேணுமென்று ஆயிழையு மந்நேரம்
கங்கைக் கரையோரம் கால்நடையாய் வந்து நின்றாள்
அவ்விடத்திலே நிற்கும் அத்திமர மொன்றின்மேல்
அனேகவித பட்சி யடைந்தங் கிருந்ததுவே
ஆற்றில்விழப் போறாளே அழகுள்ள சிங்களத்தி
ஆருக்குத் தெரியாதென் றலறினதே பட்சியெல்லாம்
கண்டிநக ராலப்பிள்ளை கண்மணிபோலே வளர்த்த
பூசணி மாதென்றும் பொற்கொடியாளா யிருக்கும்
சாகத் துணிந்தாளிச் சம்பவமென் பாவமென்று
அலறி யழுகிடுமா மம்மரத்துப் பட்சியெல்லாம்
அவ்வார்த்தை தனைக்கேட்டு அழகுமங்கை நின்றுசொல்வாள்
ஐயோவென் கெங்கையரே அடியாள்யான் சொல்லுகிறேன்
கண்டிக்கு நாலுங் கனகாலம் வந்ததென்றால்
என்னை யொரு வனுக்கே என் தாயும் பெற்றதென்றாள்
பத்தினியென் றென்னைப் பலபேருஞ் சொல்லுகிறார்
மானங்குறையாமல் மன்னரென்னைக் காணாமல்
பாதாள கங்கையிலே பதித்துவிட்டு கங்கையேயென்
கால்மேலே தலையுடலைக் கட்டாதே கங்கையரே
என்றிருகை கூப்பி ஏந்திழையா ளன்னேரம்
விளக்கெரித் தாற்போல வேகமுள்ள பூசணியாள்
மாணிக்கக் கல்லையள்ளி வாரியிறைத் தாற்போலத்
தலைகீழாய்த் துள்ளியல்லோ தான்விழுந்தாள் கங்கையிலே
பூசனியாள் கங்கையிலே போய்விழுந்த பிற்பாடு
தோழிமார் பார்த்தார்கள் தோகையைக்காணவில்லை

வெளிச்ச மெடுத்தந்த மெல்லியரைத் தேடிவந்து
காணக் கிடைக்கவில்லை கனங்குழலாள் பூசணியை
தாதியரே தோழியரே தங்கையரே கேளுமடி
பூசணியாள் திருவடியிப் பூங்காவிற் கண்டேனடி
சிற்றடியைக் கண்டதல்லால் சேயிழைக் காணவில்லை
இங்கு பிளகருந்தித் துப்பினதைப் பாருமென்றாள்
எங்குதான் போனாளோ ஏற்றதொரு பூசணியாள்
ஆற்றில்விழுந் தாளோயிவ ளாருக்குத் தான்தெரியும்
என்னசொல்வோம் மாமனுக்கு ஏற்றமொழி யென்றவர்கள்
கூவென் றழுதவர்கள் கூட்டமாகபோனார்கள்
ஆலப்பிள்ளை தம்மிடத்தில் அவர்கள் மிகக்குழறி
பூசணியா ளாற்றிலே போய்விழுந்தா ளென்றார்கள்
என்றந்தச் சேடியர்கள் ஏங்கிமுறை யிடவே
விழுந்து புரண்டழுதான் வீரமுள்ள ஆலப்பிள்ளை
நினைத்து நினைத்துமவன் நெட்டுயிர்த்து மெய்சோர்ந்து
மனத்துயரை யாற்றாது மங்கையரைத் தானினைந்தான்
சின்ன இடையழகும் சிறந்த முகத்தழகும்
அன்னநடை யழகும் அன்பாயநான் காண்பதெப்போ
அழகாய்ப் பிறந்தயெந்தன் அருமைப் பூசணியேயுனைக்
கண்ணாலே கண்டேன் கனசோட்டை தீர்க்கவில்லை
என்னை மறந்துநீ யெப்படித்தான் போனாயோ
தாழமுள்ள கங்கையிலே தனியாக விழுந்தாயோ
சந்திரர்கள் சூரியர்கள் தானவர்கள் கண்டாரோ
அம்மாநீ யெப்படித்தான் ஆற்றில் விழுந்தாயோ
அந்த வரசனைநான் அவதூறா செய்தாலும்
காணக் குயிலேயுனைக் காண்பதினி யெக்காலம்
ஏழுசுற்றுக் கோட்டை இணக்கமாய்க் கட்டிவைத்தேன்
தங்கரெத்னப் பல்லக்குத் தான்சமைத்து வைத்தேனே
பூவெடுக்கம் போனீரோ புறக்கதவில் கண்டானே
அரசனுமைக் கண்டு ஆசைமிகக் கொண்டானே
அவனாசை வைத்ததன்று அங்கே யிருந்தேனென்றால்
செய்யாத காரியங்கள் செய்வேனே அரசனுக்கு
என்னதான் செய்தாலும் ஏந்திழையே யென்கிளியே
வன்னமயில் மருமகளே மனக்கவலை தீராதே
கண்டிக்குநானும் கனகாலம் வந்தேனம்மா
உன்னாலே செல்வம் உலகுதனை ஆண்டேனம்மா
எந்தப் பிறப்பிலம்மா உனைக்காணப் போகின்றேன்
பத்தினி யென்று பலபேருஞ் சொன்னாரே
பத்தினி தனத்தாலெனை பார்க்கநீ வந்தாயே
சின்ன வயதலவோ சிற்றிடையே மருமகளே

# கண்டிராஜன் ஒப்பாரி

கலியாணம் செய்யவில்லைக் கண்ணழகு பார்க்கவில்லை
உன்சிறப்பும் பார்க்கவில்லை உத்தமியே பூசணியே
பூமிதனி·லின்னமுந்தான் புகழுண்டோ எந்தனுக்கு
ஏழுபிள்ளை நான்பெற்று இன்பமுடனே வளர்த்தே
மூத்தமகன் றனக்குமணம் முடித்துன்னை வைப்பதற்கு
எண்ணினே னம்மாவே என்னழகு பூசணியே
எண்ணமெல்லாம் பொய்யும் எழுத்தெல்லா மெய்யாகி
விளைந்ததுவோ வல்லவனே வித்தகனே இவ்விதிதான்
என்னதான் செய்தாலும் ஏந்தல்தனைக் கொன்றாலும்
கன்னல்நிகர் மருமகளே காண்பதுனை யெக்காலம்
நினைக்க நினைக்கமனம் நெருப்பா யெரியுதம்மா
நீங்காத நெஞ்சைவிட்டு நேரிழையே யுன்னெண்ணம்
ஆயிரங்கால் மண்டபமும் அதற்கேற்ற திண்ணைகளும்
பொன்னின் மிதியடியிருக்கப் பூமியிற்கால் வைத்தீரே
மாமியிடம் போகநீர் மாமனிடம் போவென்று
சொன்னாளோ மாமியரும் தோகையரே உன்னோடு
இருட்டு வனந்தனிலே என்கிளியே யுன்னுடைய
மாமனைக் காணவென்று வந்தீரோ மருமகளே
யானையைக் கண்டுநீ அஞ்சிப் பயந்தாயோ
ஆற்றைக் கடந்துநீ ரம்மானைக் கண்டீரோ
என்னைநீர் கண்டபின் நித்தாளமுள்ள கங்கையிலே
கன்னிவிழுந் திறந்ததுய ரென்னைவிட்டு மாறாதே
சந்திரர்கள் சூரியர்கள் தானவர்கள் வானவர்கள்
மெச்சிடவே ஆண்டேனே கண்டிநக ருன்னாலே
ஒருமிக்க.வந்ததுதான் ஊழெல்லா மிப்பொழுது
கள்ளப் பயலைநான் கட்டியடியேனோ
பெண்ணுக்கு வந்தவனைப் பூமியிலும் வைப்பேனோ
தலையை யுடைத்தவனைத் தரையிலே போடேனோ
மாமியிதை யறிந்தால் மாய்த்திடுவாளே யுயிரை
இக்கண்டிநகராள வைப்பேனோ கள்வனை நான்
மாற்றானை யிங்கு வரவழைத்து இப்போது
கண்டிதனைப் பிடித்துக் கொடுக்கிறேன் பாருமென்றான்
கள்ளபின் கஞ்சாக்குடிக்கும் கனத்தவெறி காரரைப்போல்
தள்ளாடித் தள்ளாடித் தானடந்தான் வனந்தனிலே
பொழுது விடிந்து புறப்பட்டான் வெய்யோனும்
விடிந்து எழுந்திருந்து விக்கிரம னென்ன சொல்வான்
ஏழுபேர் தூதவரே இப்போதே நீங்கள்போய்
பூசணியை யிங்கு பிடித்தோடி வாருமென்றான்
சொன்னவுடன் தூதரெல்லாம் சுறுக்கா யெழுந்திருந்து
பூசணியாள் தானிருந்த பொன்னறைச் சாலைபார்த்தார்

# கண்டிராஜன் ஒப்பாரி

சுற்றுக் கோட்டைதேடி யெங்குமில்லைப் பூசனியாள்
கண்டி நகர்முழுதுங் காணவில்லை யென்றூர்கள்
காணுமல் கால்சோர்ந்து கைநெறித்து மெய்மயங்கி
நாங்களென்ன செய்வோமையா ராசாவே யென்றூர்கள்
கலங்கி மனந்துயராய்க் கள்ளமனத் தூதுவரே
என்னுப்பைத் தின்று எனக்கிடறு செய்கிறீரோ
வாள்கொண்டு வெட்டியுமை வதைத்திடுவே னிப்போது
உற்றகருமத்தை யுரைத்திடுவீ ரென்றுசொன்னுன்
அதைக்கேட்ட தூதுவர்கள் அரசனடிபணிந்து
அரசே அபையம் அபையமெமைக் காருமென்றூர்
நம்முடைய உணவுதின்று உமக்குத் துரோகஞ் செய்வோமோ
பூசணியாள் கண்டிக்குள் பூமானே யில்லையென்றூர்
அப்படியோ செய்தியென்று அரசன் மிகவெருண்டு
காட்டுகிறேன் என்திறத்தைக் கைநொடிக்குள் தூதுவரே
இப்போது நீங்கள்சென்று மங்கிலியத்தைக் கொணர்ந்து
என்முன் விடுவீர்கள் என்னுடைய தூதுவரே
என்றுசொல்ல விக்கிரமன் இதைக்கேட்ட தூதுவர்கள்
உள்ளம் நடுங்கி வுடல்குழற வோடினரே
மங்கிலியந் தன்னையந்த மகாவீரர் கண்டல்லோ
விக்கிரம சிங்கனுனே விரைவில்வாச் சொன்னுரம்மா
உத்தமியே வாருமம்மா உன்மனது சம்மதியோ
பிள்ளைச் சலிமனமே பேசம்மா பேதையரே
என்றூர்கள் தூதுவர்க ளேந்திழையைத் தான்பார்த்து
வார்த்தைதனைக் கேட்டந்த மங்கிலிய மென்னசொல்வாள்
அவ்வரசன் நீதியற்ற அழிகுணத்தானு யிருக்கும்
அறிவுள்ள ராசனென்றூ லழைப்பனே யெந்தனைத்தான்
ஆலப்பிள்ளை வாரூராம் அவரோடு வாரேனென்று
சொல்லுமண்ணே ராசனுக்குத் தொகுப்பா யிதனை யென்றூள்
வார்த்ததனைக் கேட்டந்தத் தூதுவர்க ளோடிவந்து
மங்கிலியஞ் சொன்னசொல்லை மன்னவரே நீர்கேளும்
ஆலப்பிள்ளை வாரூராம் அவரோடு வாரூளாம்
கோவிக்க வேண்டாமாம் குணமுள்ள ராசாவே
இதைக்கேட்டு மனங்கலங்கி இராசன் கிலேசமுற்று
நான்போறே னென்றுசொல்லி நடந்தானே ராசாவும்
வீரவாள் கைப்பிடித்து விக்கிரம சிங்கமன்னன்
சென்றந்த மங்கிலியத்தைச் சேர்த்துப் பிடித்தானே
எங்கேயடி பூசணியாள் என்றவள் கையைப்பிடித்து
அனியாயஞ் செய்தானே அந்தவிக்ரம சிங்கனவன்
ஐயகோ ஐயகோ அனியாயம் அனியாயம்
விக்கிரமராசாவே வினீதஞ் செய்யாதே

பூசணியைக் காணவில்லைப் போனவகை நானறியேன்
என்றழுதாள் மங்கலியம் ஏழைமுகங் காட்டியவள்
மயிரைப் பிடித்திழுத்து மன்மீதிலே வீழ்த்தி
மக்களைக்கொண் டாடியென்று மன்னவனுஞ் சொன்னனே
நித்திரையிலே கிடக்கும் ஏழுபேர் மக்களையும்
கூட்டிவந்து ராசாமுன் குறுக்கிநின்றாள் மங்கிலியம்
ஒவ்வொரு பிள்ளைகளை உரலிலே நீபோட்டு
உலக்கைதனைத் தூக்கித் துவையென்று னவ்வரசன்
ஒவ்வொன்றாய் போட்டு உலக்கைதனை தூக்கியவள்
துவைத்தாளே மங்கிலியம் துயரத்துடன் அந்நேரம்
பார்த்து நின்றவீரசிங்கம் பதைத்துமனந் துடித்தந்த
உதிரமுழுதுமள்ளி உண்டானே வீரசிங்கன்
மக்களைக் கொன்றேனே மாபாவி யானேனே
புழுவாய்த் துடித்துப் புரண்டழுதாள் மங்கிலியம்
மன்ன னிதையறிந்தால் மாய்த்திடுவாரே வுயிரையென்று
அந்த ஏழுமக்கள் தம்முதிரம் இன்பமுட னேகுடித்து
இரத்தவெறி யாகிநின்றான் வீரசிங்க னன்னேரம்
வீரவாளுருவியவளை வெட்டிவிட்டான் இரண்டு துண்டாய்
வீரவாள் தன்னாலே வெட்டுண்ட மங்கிலியம்
தலைவே றுடல்வேறாய் தத்தளிக்கும் வேளையிலே
பூசணி எங்கேயடா அப்பொல்லாத பூதமென்று
கண்ணெதிரே நிற்பாளென்றால் காயவைப்பேன் கீறியல்லோ
என்னிடம் பூசணியைக் கொடாது விட்டால் மந்திரியே
கொல்லுவே னென்றுசொன்னான் கோபத்துடன் வேடன்
அன்னேர மாலப்பிள்ளை வாறாரென்ற செய்திகேட்டுப்
போய்த்தா னொளித்திருந்தான் பொன்னினிறக் கச்சேரிக்குள்
ஏழு அறைதிறந்து இருட்டறைக்குள்ளே புகுந்து
ஒளித்திருந்தான் ராசாவும் ஊராரறியாமல்
அன்னேர மாலப்பிள்ளை ஆத்திரத்தோ டேநடந்து
கொழும்புநகர் மேவி கொம்பனி யிங்கிலீஷருடன்
கண்டுதனைப்பிடித்துத் தாறேனா னென்று சொல்லிக்
கைப்பிடியா யிங்கிலிஷரைக் கூட்டியிங்கு வருகையிலே
மக்காள்மனைவி யெல்லாம் மாண்டுமடிந்தசெய்தி
காதிலே கேட்டுக் கலக்கமுற்றுத் தானழுதான்
மக்கள் மனைவியென்று மார்போடு தானறைந்து
மண்ணில் விழுந்து புரண்டழுதா னலப்பிள்ளை
அழா தேடா நீஎன்று இங்கிலீஷர் தானவனைத்
தேற்றி எடுத்தணைத்து வந்தார்க ளெல்லோரும்
இங்கிலிஷர் தன்னையங் கிருத்தியந்த ஆலப் பிள்ளை
அடித்தான் தலைக்கதவை அப்பாலேதான திறக்க

1022613

எழு அறையுடைத்து இருட்டறைக் குள்ளே புகுந்து
இழுத்துவந்தான் விக்கிரமனை எழிலுள்ள ஆலப்பிள்ளை
குடுமி தன்னைப் பிடித்து கிலிக்கிநெட்டி தான்வாங்கி
கள்ளப்பயலே என்று கன்னத்திலேயறைந்தான்
அறையோடு ராசனப்போ அரைச்சிவனானே
இவனைப்பிடியுமென்று உதைத்துருட்டி விட்டானே
இங்கிலிசு தான் பிடித்து இராசானவ மட்டடக்கி
வைத்ததுவே காவலிலே வன்மையுள்ள இங்கிலிஷர்
கண்டி பிடித்தான் கனதேசமும் பிடித்தான்
நகரிமுழுதும் பிடித்தான் நம்மாடு தான்பிடித்தான்
கோட்டைபிடித்தான் கொத்தளமெல் லாம்பிடித்தான்
பூசணியால் தானிருந்த பொன்னிறச்சாலைகளும்
எழுசுற்றுக் கோட்டையிலும் இனிதிருத்திப் பட்டாளம்
அணிவகுத்து வைத்தாரே ஆண்மையுள்ள இங்கிலிஷர்
இப்படிவந்த இங்கிலிஷர் இலங்கை முழுதும பிடித்து
ஆண்டிருக்கு நாளையிலே அறிவினாலோசித்து
ஆலப்பிள்ளை நம்முன்னே அச்சஞ் சிறிதுமின்றி
அடித்தானே விக்ரமனை அப்படிப் பட்டவனை
வைத்திருந்தால் நம்தமக்கும் வருமே கெடுதியென்று
சூட்சமுள்ள கப்பலொன்று சொல்லிச் செய்வித்தார்கள்
ஆலப்பிள்ளையைக் கப்பலிலேற்றி நடுக்கடலில் போகவிட்டு
போகையிலே சூத்திரத்தைப் பொறித்துவிட்டாரிங்கிலிஷர்
ஆலப்பிள்ளை நீரில் அமிழ்ந்து மடிந்துவிட்டான்
மாண்டு மடிந்தானே வைகுந்தஞ் சேர்ந்தானே
இப்படியா யிங்கிலிஷர் இந்த இலங்கைமுற்றும்
தப்பாமலே பிடித்துத் தானாண்டு வாறார்கள்
சொன்னார்கள் முன்னோர்கள் சுருக்கமா யிக்கதையை
மென்மேலும் கீர்த்திபெற்று விளங்கி நடந்திடவே
ஏராரு மிக்கதைதான் எளிதா யுலகிலுள்ளோர்
படித்து அறியவென்று பக்குவமாய்ச் சீர்திருத்தி
முன்னோ ரெழுதிவைத்த முறையைத்தழுவி
இன்னாளிலெவரும் இலகுவாய்க் கற்றறிய
பாரிலுள்ளோர்க்குப் பற்பல புத்தகங்களைச்
சீரியவழியிற் செய்து தருபவராம்
ஷாஹுல் ஹமீதிய்யாசாலை யதிபர்க ளச்சிட்டு
பிரசித்தியுடனே விற்பவரு மிக்கதையை
அன்பாய்ப் படித்தோர்கள் ஆசையாய்க் கேட்டவர்கள்
துன்ப மொருக்காலும் தோகையர்க்குச் செய்யாமல்
இன்பாக இவ்வுலகில் இனிதாக வாழியவே.

கண்டிராஜன் ஒப்பாரி முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras, P. I. C. No. MS 178, 30-10-1947,

எங்களது சொந்த பிரசு[illegible]ளுள் சில :—

| | | | |
|---|---|---|---|
| நஸ்ஹ‌ுல் ஹதீது வபத்ஹுல் மஜீது ரூ. | 6 | 4 | 0 |
| நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம் ... | 6 | 4 | 0 |
| சீறுபுராணம் பாட்டு ... ... | 3 | 12 | 0 |
| சீறுபுராணம் மூலமும் உரையும் முதற்பாகம் | 5 | 0 | 0 |
| மஜ்மூஅ முஃஜிஸாதே றஸூல் ... | 1 | 14 | 0 |
| சீரத்துல் பாறூக் ... ... | 2 | 8 | 0 |
| பத்ஹுல் மிஸர் ... ... | 2 | 3 | 0 |
| பைத்துல் முகத்திஸின் யுத்த சரித்திரம் | 2 | 8 | 0 |
| தரீக்குல் ஜன்னு ... ... | 3 | 0 | 0 |
| தன்பீஹுஸ்ஸாலிகீன் ... ... | 1 | 8 | 0 |
| பத்ஹுற் றஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான் | 2 | 0 | 0 |
| மஜ்மூஅ சூறத்துல் குர்ஆன் (முக்கியமான 40 சூராக்கள் தமிழிலும் அரபியிலும்) | 2 | 8 | 0 |
| மிஃறுஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமதி மின்ஹாஜில் ஆபிதீன் ... | 2 | 8 | 0 |
| மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ யீலாஹின்னிகாஹ் | 3 | 0 | 0 |
| மிப்தாஹுஸ் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி ... | 1 | 14 | 0 |
| ழுருருல் முஃமினீன் 1 முதல் 4-வது பாகம் | 4 | 6 | 0 |
| ஷை 5-வது பாகம் முதல் 8-வது பாகம் | 4 | 6 | 0 |
| ஷை 9-வது பாகம் முதல் 12-வது பாகம் | 4 | 6 | 0 |
| ஷை 1 முதல் 12 பாகம் வரை ... | 11 | 4 | 0 |
| கதீஜா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம் | 1 | 4 | 0 |
| பாத்திமா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம் | 1 | 4 | 0 |
| ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம் | 1 | 9 | 0 |
| ஷை 3 நாயகிகளின் சரித்திரங்கள் சேர்த்து | 3 | 12 | 0 |

கிடைக்குமிடம் :—

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20. ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.